

நகரப்புற உள்ளாட்சித் துறை அமைச்சர் நேரு.அவர்களே ஆண்டிபட்டி பேரூராட்சி சேர்மன் பொன் சந்திரகலா சந்தித்து பேரூராட்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகள்சிமெண்ட் சாலைகள் டிராக்டர் மயான சுற்றுச்சவர் மற்றும் பல்வேறு கோரிக்கை அடங்கிய மனு அளித்தார். மாவட்ட பிரதிநிதி பொன்னுத்துரை உடன் இருந்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் இருந்து காணொலி காட்சி வாயிலாக வடக்கு வள்ளியூர் பேரூராட்சிக்கு உட்பட்ட ஊற்றடி பகுதியில் ரூபாய் 48 லட்சம் மதிப்பீட்டில் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். அதனைத் தொடர்ந்து ஊற்றடி பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று சமுதாயக்கூடம் கட்டுவதற்கு பணிகளை துவக்கி வைத்தார்.உடன் உள்ளாட்சி பிரதிநிதிகள் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின விழிப்புணர்வு நிகழ்ச்சி!

# குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலும் ஒழிப்போம்!

## தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் உறுதி!

சென்னை, ஜூன். 13-

குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12 ஆம் தேதி உலக அளவில் அனுசரிக்கப்பட்டு வருகிறது. குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புதினவிழிப்புணர்வு நிகழ்ச்சி தொழிலாளர் துறையின் சார்பாக நேற்று (12.06.2025) சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் அனுசரிக்கப்பட்டது.

இன்றைய தினத்தில் மாநில அளவிலான குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்புதினவிழிப்புணர்வு நிகழ்ச்சி, சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக விழா அரங்கத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி. வெ.கணேசன் தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்ட மனிதச் சங்கிலி மற்றும் விழிப்புணர்வு பேரணியுடன் பிரச்சார வாகனத்தில் விழிப்புணர்வு வாசகங்கள் அறிவிக்கப்பட்டு, துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டது. மேலும், கரகாட்டம், பறையாட்டம் மற்றும் மரக்கால் ஆட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான கையெழுத்து இயக்கம் துவக்கி வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிராக உறுதிமொழி எடுக்கப்பட்டது குழந்தை தொழிலாளர் முறையிலிருந்து மீட்கப்பட்டவர்கள் அவர்களது அனுபவங்களை பகிர்ந்தனர்.

இந்நிகழ்ச்சியில் குழந்தைத் தொழிலாளர் முறை அகற்றுதலில் சிறப்பாக பணிபுரிந்த கள அலுவலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு கேடயம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ.வீரராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி.ஆர்.ராமன், செ.ஆனந்த், இயக்குனர், தொழிலாக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், தொழிலாளர் துறை உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு

# மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்! ஒன்றிய செயலாளர் மணிமாறன் ஏற்பாடு!

மைலம் ஜூன் 13–

மயிலம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு 1000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ வழங்கினார்.ஒன்றிய செயலாளர் மணிமாறன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்தி ருந்தார்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழாவை செம்மொழி நாளாக தீவனூர் ஊராட்சியில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார்.ஒன்றிய கவுன்சிலர் பரிதா சம்சுதீன் அனைவரையும் வரவேற்றார். மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் தலைமையில் திமுக நிர்வாகிகள் ஊர்வலமாக சென்று முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி ஆயிரம் நபர்களுக்கு இனிப்பு உடன் கூடிய அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை மாவட்ட பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்.

இதைத்தொடர்ந்து மயிலம் வடக்கு ஒன்றியம் கொள்ளார் ஊராட்சியில் முனியாண்டி ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. முன்னிலையில் ஒன்றிய பெருந்தலைவர்யோகேஸ்வரி மணிமாறன் கழக இரு வண்ணக் கொடியினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து பொது மக்களுக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. இனிப்புகளை வழங்கினார்.

இதில் டாக்டர் மாசிலாமணி, டாக்டர் சேகர், சம்சுதீன், உமா ஞானசேகர், கீதா சிவக்குமார், சாந்தகுமார், கோமதி பிரகாசம்,ராஜ் பரத், சேகர், சண்முகம், சேகர், சிவானந்தம், ஞானசேகர், பாஸ்கர், பிரபு, அன்பு சேகர், உதயவாணன், முனியாண்டி , விஜயன், பூங்கா பாக்ய ராஜ்.,கந்தவேல், நடராஜன், ரவி, ரத்தினவேல், தமிழ்செல்வம், கருணாநிதி, வீராசாமி ,ரமேஷ், உத்தர குமார், நாராயணன், காந்தி, கோவிந்தம்மாள், சண்முகம், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கத்திலிருந்து மகளிர் திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு வங்கிக் கடன் இணைப்பு மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வினை துவக்கி வைத்தார்கள்.அதனைத் தொடர்ந்து தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார்,மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர் ஆகியோர் வழங்கினர்.உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி நாடார் (தென்காசி) சதன் திருமலை குமார் (வாசுதேவநல்லூர்) திட்ட இயக்குனர் (பொ) (மகளிர் திட்டம்) மைக்கேல் அந்தோணி பெர்ணான்டோ உள்பட பலர் உள்ளனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம்சட்டமன்ற தொகுதியில் உள்ள கிராம ஊராட்சிகளில் சரவணக்குமார் எம்.எல்.ஏ. நேரில் சென்று பொதுமக்களிடம் குறைகள் கேட்டறிந்தார். பொதுமக்கள் குறைகளைஉடனுக்குடன் தெரிந்து கொள்ள வாட்ஸ் அப் குரூப் பொதுமக்களைச் சேர்த்து குறை இருந்தால் இந்த குரூப்பில் போட்டவுடன் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். உடன் ஒன்றிய செயலாளர் பாஸ்கரன் அய்யன். கிளைச் செயலாளர் சந்தானம். இளைஞர் அணி துணை அமைப்பாளர் தெய்வேந்திரன், அரசு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மகளிர் சுய உதவிக்குழு தினம்!

# ஒன்றிய மோடி அரசு அரசியல் அமைப்புச் சட்டத்தை குப்பையில் போட்டு விட்டனர்!

## சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு பேச்சு!



நெல்லை, ஜூன் 13-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழு தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (11.06.2025) சென்னையில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு மற்றும் மணிமேகலை விருதுகள் வழங்கினார்கள்.அதனைத் தொடர்ந்து நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை நேருஜி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று 504 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 60.02 கோடி மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்புகளை மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார், மாநகராட்சி மேயர் கோ. இராமகிருஷ்ணன்,துணை மேயர் கே.ஆர். ராஜு,மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் வி. எஸ்.ஆர்.ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.முன்னதாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் அமைக்கப்பட்டிருந்த மகளிர் சுய உதவி குழு உற்பத்தி கண்காட்சியினை துவக்கி வைத்து பார்வையிட்டார்.

பின்னர் சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

பாரதிய ஜனதா கட்சி ஆட்சியில் ஒன்றிய அரசால் பாதிக்கப்பட்ட மாநிலமாக தமிழகம் உள்ளது.மொத்தம் பொதுவாக 10 லட்சம் கோடி தந்தோம் 20 லட்சம் கோடி தந்ததோம் என ஒன்றிய அரசு சொல்கிறதே தவிர எந்த திட்டத்திற்கு நிதி ஒதுக்கி உள்ளது என சொல்லமாட்டார்கள். மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை ஆரம்பிப்பதற்கு பிரதமரால் அடிக்கல் நாட்டப்பட்டது. இதுவரை எந்த நிதியும் ஒதுக்கப்பட வில்லை.தமிழகத்திற்கு ரயில்வே திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 701 கோடி ரூபாய் திரும்ப பெறப்பட்டுள்ளது.மாநில அரசை ஒன்றிய அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது.

**ரூ.63000 கோடி கொடுத்ததாக பொய் சொல்லும் ஒன்றிய அரசு!**

சென்னையில் இரண்டாவது மெட்ரோ ரயில் திட்டத்தை உள்துறை அமைச்சர் நேரடியாக வந்து எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக இருக்கும் பொழுது ஆரம்பித்தார்கள். அந்தத் திட்டத்திற்கு ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் வழங்கவில்லை, எந்தவிதமான நிதியும் இது வரை கொடுக்கவில்லை. ஆனால் 63,000 கோடி ரூபாய் நிதி கொடுத்துள்ளதாக பா.ஜ.க பொய் சொல்கிறது.ஒன்றிய அரசின் திட்டத்திற்கு 7000 கோடி மட்டுமே நிதி கொடுத்துள்ளது. மாநில அரசு 26 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்துள்ளது. மீதி பணம் கடனாக பெறப்பட்டு உள்ளது. கடனை திரும்ப செலுத்துவதில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் அதற்கு முழு பொறுப்பு தமிழக அரசு தான் என ஒப்பந்தம் போட்டுள்ளது.7000ம் கோடி ரூபாயை கொடுத்துவிட்டு, 63 ஆயிரம் கோடி கொடுத்ததாக சொன்னால் என்ன நியாயம் உள்ளது.

**4 ஆண்டுகளாக நிதி தரவில்லை!**

நகர்ப்புறங்களில் ஏழைகளுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒன்றிய அரசு ரூபாய் 1.50 லட்சம் மட்டுமே வழங்குகிறது. ரூபாய் 8.50 லட்சத்தை மாநில அரசு வழங்குகிறது. எஞ்சியுள்ள பணத்தை பயனாளிகள் செலுத்துகின்றனர்.கிராமப்புறங்களில் வீடு கட்டும் திட்டத்திற்கு ஒன்றிய அரசு ரூபாய் 60,000 கொடுக்கிறது.தமிழக அரசு ரூபாய் 2.50 லட்சம் வழங்குகிறது.ஒன்றிய அரசு தர வேண்டிய நிதியை நான்காண்டு களாக தரவில்லை. கல்வித்துறைக்கு தரவேண்டிய நிதியை ஒன்றிய அரசு தரவில்லை.மாநில அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. மொத்தம் பொதுவாக நிதி ஒதுக்கியதாக சொல்வார்கள்.

ஆனால் எந்த நிதி என்பதை தெளிவாக சொல்ல மாட்டார்கள்.இந்தியாவில் உள்ளவர்கள் இந்தியர்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்தியாவை மதச் சார்பற்ற நாடு என செல்கிறது. இந்த நாட்டிற்கு அரசியல் அமைப்பு சட்டம் என ஒன்று உள்ளது. அதன்படி தான் வாழ வேண்டும் ஒன்றிய பா.ஜ.க அரசு பொறுப்பேற்ற பின்னர் அரசியலமைப்பு சட்டத்தை குப்பையில் தூக்கி போட்டு விட்டார்கள்.ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை கொண்டு வர முயற்சி செய்கிறார்கள். அதனைத்தான் நாங்கள் கண்டிக்கிறோம். எல்லோரும் கல்வி கற்கலாம் என்பதே பிரிட்டிஷ் கல்வி கொள்கை. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியாளர் தான் நமது கலாச்சாரத்தை அழித்துவிட்டார்கள் என ஆளுநர் சொல்கிறார். ஆர்.எஸ்.எஸ் கலாச்சாரம் என்பது உயர் ஜாதியினர் மட்டுமே படிக்கலாம் மற்ற ஜாதியினர் படிக்கக்கூடாது என்பது ஆகும்.அந்த சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்துவது தான் புதிய கல்விக் கொள்கை.தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக கொதித்தெழுந்தது தமிழகம் மட்டும் தான்.ஒருபோதும் புதிய கல்விக் கொள்கையை அனுமதிக்க மாட்டேன் என முதலமைச்சர் சொல்கிறார். புதிய கல்விக் கொள்கை என்பது ஆர்.எஸ்.எஸ் சித்தாந்தம் சனாதன தர்மம்.தமிழகம் முழுவதும் மீண்டும் தமிழகத்தில் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சி அமைக்க வேண்டும் என அனைத்து கிராமத்தில் உள்ள பெண்களும் நினைக்கிறார்கள்.234 சட்டமன்ற தொகுதியிலும் தமிழக முதலமைச்சர் அவர்கள் சொல்லும் வேட்பாளருக்கு வாக்களிக்க தயாராக உள்ளனர்.

பா.ஜ.க.வுடன் தற்போது வந்துள்ள எதிர்க்கட்சித் தலை வர் எடப்பாடி பழனிச்சாமி கடைசி வரை அவருடன் இருப்பாரா என்பதே கேள்விகுறி. அவர் வேறு முடிவு எடுத்து விட்டார்.என்னிடம் பேசிக் கொண்டிருக்கும் அ.தி.மு.க எம்.எல்.ஏ.க்களே அதனை சொல்கிறார்கள். பா.ஜ.க மாநில தலைவர் நயினார் நாகேந்திரனை முன்னாள் வைத்துக் கொண்டு தான் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி வரப்போகிறது என்பதை அமித்ஷா சொன்னார்.எடப்பாடி பழனிச்சாமியை டெல்லியில் அழைத்து வைத்தும் அதையே தான் சொன்னார். எதிர்க்கட்சித் தலைவர் சுயமாக சிந்திக்க கூடியவராக இருந்தால் விரைவில் நல்ல முடிவை எடுப்பார்.பா.ஜ.க. விடம் ஒரு முடிவு தெளிவாக இருக்காது.எதை கேட்டாலும் டெல்லியில் முடிவு செய்வார்கள் என்று தான் சொல்லிவிடுவார்கள்.

இவ்வாறு பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தஞ்சை ந. பூபதி

**ஜூன் 13 (2006)**



தஞ்சை நகரக் கழக முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர்.

தஞ்சை நகரக் கழகப் பொறுப்பாளர், பொதுக்குழு உறுப்பினர், நகர்மன்றத் துணைத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

தலைவர் கலைஞர் இடும் கட்டளை எதுவானாலும் அதை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடியவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**